# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8006097

1. District மாவட்டம் : Coimbatore | PS: காவல்நிலையம் : VSAC | Year: ஆண்டு : 2019 | FIR No.: மு.த.அ. எண் : 22/2019 | Date: நாள் : 7/11/2019

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended | Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: by Prevention of Corruption | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் : 6.11.2019 A/S, 9.00 PM | Date to : நாள் வரை : -
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் : - | Time to : நேரம் வரை : -
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 7.11.2019 | Time நேரம் : 13.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : 7.11.2019 | Time நேரம் : 13.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : Computer Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் : Approx 27 kms towards South East
   Beat Number : முறைக் காவல் எண் :
   (b) Address : முகவரி : Tea shop near the site of Complainant at Kannampalayam [S.No. 329/4]
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் :
   District : மாவட்டம் :

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : P. Balachandapani
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : Palanisamy
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 6312019
   (d) Nationality : நாட்டினம் : Indian
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் :
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் :
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் :
   (f) Occupation : தொழில் : Business
   (g) Address : முகவரி : D.No. 11/1 Balasundaram Street Kamadenu Nagar (West), K.K. Puram Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Accused To: Balasubramaniam
   District Fire Officer
   Coimbatore

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் : No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

7.11.19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
7/11/2019

Name: பெயர் ..............................
Rank: நிலை ....................No. எண் ..........

சமர்ப்பிக்கப்படுகிறது:

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.22/2019/AC/CB u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as Amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர், C.ராஜேஷ் ஆகிய நான் 07.11.2019-ம் தேதி மதியம் 1.30 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்த போது கோவை மாவட்டம் கே.ஆர்.புரம், காமதேனு நகர் (மேற்கு), பாலசுந்தரம் வீதி, கதவு எண்.11/1-ல் வசிக்கும் திரு.பழனிச்சாமி மகன் திரு.P.பாலதண்டபாணி, வயது-63, என்பவர் என் முன்பு ஆஜராகி திரு.பாலசுப்பிரமணியம், மாவட்ட தீயணைப்பு அலுவலர், கோவை என்பவர் மீது கணினியில் தட்டச்சு செய்த புகார் மற்றும் 06.11.2019-ம் தேதி டீக்கடையில் வைத்து திரு.P.பாலதண்டபாணி மற்றும் திரு.பாலசுப்பிரமணியம், மாவட்ட தீயணைப்பு அலுவலர், கோவை ஆகியோர்களுக்கு இடையே நடைபெற்ற உரையாடல்களுடன் கூடிய வீடியோ பதிவு அடங்கியுள்ள Sandisk என்ற பெயர் பதிக்கப்பட்ட 16 GB Pendrive ஆகியவற்றை கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். அந்த புகாரில் திரு.பாலசுப்பிரமணியம், மாவட்ட தீயணைப்பு அலுவலர், கோவை என்பவர் புகார் வாதியின் மகன் திரு.கௌசிக் என்பவரது பெயரில் ஆரம்பிக்கப்படும் Petrol Bunk சம்மந்தமாக தடையில்லா சான்று வழங்க லஞ்சமாக ரூ.50,000/- கேட்டு புகார் வாதியின் வேண்டுகோளுக்கேற்க லஞ்ச பணம் ரூ.40,000/- க்கு ஒத்துக்கொண்டதாகவும் ஆனால் அவருக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பம் இல்லை என்றும் அதனால் திரு.பாலசுப்பிரமணியம், மாவட்ட தீயணைப்பு அலுவலர், கோவை என்பவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியிருந்தது தெரியவந்தது. பின்னிட்டு நான் புகார் வாதியின் முன்னடத்தை மற்றும் எதிரியின் முன்னடத்தை பற்றியும் புகார் வாதி மற்றும் எதிரிக்கு இடையே முன் விரோம் ஏதேனும் உள்ளதா என தகவளாலியின் மூலம் தகவல் சேகரித்தேன். எதிரிக்கும் புகார்வதிக்கும் எந்த முன் விரோதமும் இல்லை என்றும், எதிரியின் நடத்தை

சர்ச்சைக்குறியது என்றும் என் ரகசிய விசாரணையில் தெரியவந்தது. மேலும் புகார் வாதி ஆஜர் செய்த Pendrive-ல் உள்ள ஆடியோவுடன் கூடிய வீடியோ பதிவு கவனமாக கேட்கப்பட்டது. அதிலிருந்து புகார் வாதியின் புகார் உண்மையானது என தெரியவந்தது. எனவே நான் புகார் வாதியின் புகார் குறித்து சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்திற்கு தகவல் கொடுத்து இயக்குநரகத்தில் இருந்து வாய்மொழி உத்தரவு பெற்று இன்று 07.11.2019-ம் தேதி மாலை 17.15 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.22/2019/AC/CB u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as Amended by the Prevention of Corruption (Amendment) Act 2018- ன் படி மேற்படி எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விபரம் பின் வருமாறு: அனுப்புனர் P.பாலதண்டபாணி, வயது-63, த/பெ பழனிச்சாமி, கதவு எண்.11/1, பாலசுந்தரம் வீதி, காமதேனு நகர் (மேற்கு), கே.ஆர்.புரம், கோயம்புத்தூர். பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு பிரிவு, கோயம்புத்தூர். அய்யா, நான் கோயம்புத்தூர் கே.ஆர்.புரம், காமதேனு நகர் (மேற்கு), பாலசுந்தரம் வீதி, கதவு எண்.11/1-ல் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் கோவை, ஆர்.எஸ்.புரத்தில் கடந்த 35 வருடமாக சொந்தமாக டிராவல்ஸ் வைத்து நடத்தி வருகிறேன். எனக்கு சூலூர் கண்ணம்பாளையம் கிராமத்தில் சர்வே எண் 329/4-ல் 25 சென்ட் கொண்ட இடம் எனது பெயரிலும் எனது மனைவி திருமதி.வேலுமணி பெயரிலும் கூட்டாக உள்ளது. மேற்படி இடத்தில் Hindustan Petroleum Corporation limited நிறுவனம் மூலமாக எனது மகன் கௌசிக் பெயரில் Petrol Bunk ஆரம்பிக்க முடிவுசெய்தோம். இதற்காக Hindustan Petroleum Corporation limited நிறுவனத்தில் எனது மகன் பெயரில் விண்ணப்பம் கொடுத்தோம். நான் 21.10.2019-ம் தேதி கோவையில் உள்ள Hindustan Petroleum Corporation limited நிறுவன அலுவலகத்திற்கு நேரில் சென்றேன். அப்போது DGM அவர்கள் Petrol bunk எனது மகன் பெயரில் ஆரம்பிக்க அனுமதி அளிக்க தயாராக உள்ள விபரத்தை தெரிவித்து தடையில்லா சான்று வழங்கக்கோரி மாவட்ட ஆட்சியர் அவர்கள் அலுவலகத்தில் கொடுப்பதற்காக வேண்டி ஒரு கவரை கொடுத்தார். மேலும்

நிபந்தனைகளுக்குட்பட்டு எனது மகன் பெயரில் Hindustan Petroleum Corporation limited-ன் retail outlet dealership தர சம்மதம் தெரிவிக்கப்பட்ட கடிதத்தையும் கொடுத்தார்கள். நான் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கொடுப்பதற்காக பெற்ற கவரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அன்றைய தினமே ஒப்படைத்தேன். அதன் பின்னிட்டு 01.11.2019-ம் தேதி நான் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்றபோது என்னிடம் அங்கிருந்த பெண் அலுவலர் மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட தீயணைப்பு அலுவலர், கருமத்தம்பட்டி துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் சூலூர் வட்டாட்சியர் ஆகியோர்களுக்கு முகவரி இடப்பட்ட நான்கு கவர்களை கொடுத்து அதனை மேற்படி அலுவலகங்களில் கொடுக்க வேண்டும் என்றும், அந்த அதிகாரிகளிடமிருந்து தடையில்லா சான்று பெற்று வர வேண்டும் என்றும் என்னிடம் கூறினார். அதன்படி நானும் என்னிடம் கொடுக்கப்பட்ட நான்கு கவர்களை அந்தந்த அலுவலகங்களில் அன்றே ஒப்படைத்தேன். மாவட்ட தீயணைப்பு அலுவலர் (DFO) திரு.பாலசுப்பிரமணியம் அவர்களை 01.11.2019-ம் தேதியன்று அவரது அலுவலகத்தில் வைத்து கவரை கொடுத்த சமயத்தில் நேரில் சந்தித்து விபரம் சொன்ன போது அவர் எனது இடத்திற்கு ஆய்வுக்கு வருவதாக தெரிவித்து எனது தொலைபேசி எண்ணை வாங்கி வைத்துகொண்டு என்னை அழைப்பதாக சொன்னார். பின்னர் 06.11.2019-ம் தேதி காலை சுமார் 09.00 மணிக்கு என்னிடம் தொலைபேசி மூலம் தகவல் சொல்லி அன்றைய தினம் எனது இடத்திற்கு ஆய்வு செய்வதற்காக வந்தார். அப்போது எனது இடத்திற்கு அருகாமையில் இருந்த Transformer-யை பற்றி என்னிடம் விசாரித்தார். நான் மேற்படி Transformer-ஆனது எனது இடத்திற்கு 15 மீட்டர் தள்ளிதான் உள்ளது என்று சொன்னேன். ஆய்வு முடித்த பின்பு அவர் அவரது அரசு வாகனத்தில் ஏறிய பின்பு என்னிடம் டீ கடைக்கு வாங்க அங்கு வைத்து பேசிக்கொள்ளலாம் என்று சொன்னார். நானும் அவரது வாகனத்தை பின்தொடர்ந்து சென்று எனது இடத்திற்கு அருகே இருந்த டீக்கடைக்கு சென்றோம். அங்கு அமர்ந்து பேசிக்கொண்டிருந்த போது நான் அவரிடம் நான் என்ன பண்ண வேண்டும் என்று சொல்லுங்க என்று கேட்டேன். அதற்கு அவர் சில காரணங்களை கண் முன்பு வைத்து கொண்டு NOC கொடுத்துவிட்டால் அதன் பின்னு DRO, RDO- ஆகியோர்கள் இடத்தை பார்வையிட்டுவிட்டு என்னிடம் கேட்டால் நான் பதில் சொல்ல வேண்டியிருக்கும்

என்று சொல்லி DRO இடத்தை பார்வையிட்டுவிட்டாறா என்று கேட்டார் நானும் அவர் பார்வையிட்டுவிட்டதாக அவரது assistant சொன்னதாகவும் அடுத்த வியாழக்கிழமை என்னை போனில் பேசிவிட்டு அலுவலகத்திற்கு நேரில் வந்து சந்திக்க சொல்லி உள்ளதாக தெரிவித்தேன். மேலும் தாசில்தாரை பற்றியும் விசாரித்தார். மேலும் அவர் என்னிடம் transformer 15 மீட்டர் தொலைவில் உள்ளதா என்று பார்க்கவேண்டும் என்று சொன்னார். நான் அவரிடம் டேப்பை கொண்டு வந்து அளந்து பார்க்கலாம் என்றும், சொல்லியிருந்தால் டேப்புடன் வந்திருப்பேன் என்றும் சொன்னேன். பின்னர் அவர் யோசித்துவிட்டு ஒரு 50,000/- கொடுங்கள், நான் மற்றவர்களிடமும் transformer விபரத்தை சொல்லிவிட்டு NOC தருகிறேன் என்று சொன்னார். நான் ரூபாய் 5,000/- எடுத்து அவரிடம் கொடுத்து balance பின்னர் தருகிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் மொத்தமாக கொடுங்கள் என்று சொல்லி நான் கொடுத்த பணம் ரூ.5,000/- பெற்றுக்கொள்ளவில்லை. பின்னர் இன்றே வந்து பார்த்து பணத்தை கொடுங்கள் NOC கொடுத்துவிடுவதாக சொன்னார். அப்போது நான் அவரிடம் எனது மகன் திருமணத்திற்கு அழைப்பிதழ் கொடுப்பதற்காக சென்னை செல்வதாக தெரிவித்து சென்னையில் இருந்து திரும்ப வந்த பின்பு சந்தித்து பணம் கொடுப்பதாக சொன்னேன். அதற்கு அவர் பணத்தை ரெடி செய்து கொடுத்தால் இன்றே NOC தர தயாராக உள்ளதாக சொன்னார். நான் அவரிடம் சென்னை சென்று விட்டு அடுத்த திங்கள் முதல் புதன் கிழமைக்குள்ளே வந்து சந்தித்து பணம் கொடுப்பதாக சொன்னேன். அதற்கு அவர் ஆய்வு முடித்து 3 நாளைக்கு மேல் பைலை நான் வைத்து கொள்ளமாட்டேன் வெள்ளிக்கிழமைக்குள் வந்து பார்த்து பணம் கொடுப்பதாக இருந்தால் சான்று தருகிறேன் இல்லாவிட்டால் பைலை திரும்ப பெற்றுக்கொள்ளுங்கள் என்றும், சென்னையில் இருந்து வந்த பின்பு திரும்ப பைலை கொடுங்கள் என்றும் சொன்னார். நானும் எனது program- மை மாற்ற முடியுமா என்று வீட்டில் பேசிவிட்டு வெள்ளிக்கிழமை வர முடியுமா என்று தகவல் தெரிவிப்பதாக சொல்லி தொகையை கொஞ்சம் குறைக்க முடியுமா என்று கேட்டேன். அதற்கு அவர் செய்ய முடியாத காரியத்தை செய்து தருகிறேன். அப்புறம் பாத்துக்குங்க, எனக்கு ஒரு செகண்ட் தான் ஆகும் திருப்பி அனுப்ப என்று மிரட்டினார்.

மேலும் சின்ன பிரச்சனை இருப்பதால் தான் அந்த தொகையை கேட்டுள்ளதாக சொன்னார். நான் 40,000/-ரூபாய்க்கு முடித்து கொடுக்குமாறு அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் சரியென்று ஒப்புக்கொண்டார். அவர் நாட்களை தள்ளி போடுவதாக இருந்தால் பைலை ஆபீசில் இருந்து வாங்கி செல்லுமாறு மீண்டும் சொன்னார். நானும் வீட்டில் பேசிவிட்டு வெள்ளிக்கிழமை வர முடியுமா இல்லையா என்ற விபரத்தை அவரிடம் தகவல் சொல்வதாகவும் அப்படி வெள்ளிக்கிழமை வருவதாக இருந்தால் பணத்தை கொடுத்துவிட்டு NOC-யை பெற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தேன். அதற்கு அவர் ஒத்துக்கொண்டார். பின்னர் நாங்கள் அங்கிருந்து சென்றுவிட்டோம். மேற்படி டீக்கடையில் வைத்து நாங்கள் பேசிய உரையாடலை எனது மொபைல் போனில் வீடியோ ரெக்கார்டு செய்து வைத்துள்ளேன். அன்றைய தினம் (06.11.2019) மாலை எனது மொபைல் போனில் இருந்து அவரது மொபைல் போனுக்கு தொடர்பு கொண்டு வெள்ளிக்கிழமை பணத்துடன் வருவதாக சொன்னேன். அவரும் சரி என்று சொன்னார். எனக்கு திரு.பாலசுப்பிரமணியம், மாவட்ட தீயணைப்பு அலுவலர் (DFO) அவர்களுக்கு லஞ்சமாக பணம் ரூ.40,000/- கொடுத்து தடையில்லா சான்று பெற விருப்பம் இல்லை எனவே தடையில்லா சான்று வழங்க லஞ்சமாக ரூ.40,000/- கேட்கும் திரு.பாலசுப்பிரமணியம், மாவட்ட தீயணைப்பு அலுவலர் (DFO) அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் இத்துடன் எனது மொபைல் போன் மூலமாக 06.11.2019-ம் தேதி டீக்கடையில் வைத்து பதிவு செய்த வீடியோ ரெக்கார்டை Pendrive-க்கு மாற்றம் செய்து ஆஜர் செய்கிறேன்.இடம்: கோவை நாள்: 07.11.2019 இப்படிக்கு Sd/- (xxxxx) 7.11.2019 (P.பாலதண்டபாணி). Madam, Received the complaint on 07.11.2019 at 13.30 hrs Sd/- (x/x/x) 07.11.2019 DSP/V&AC/Coimbatore. Madam, After conducting discreet enquiry, a case in Coimbatore V&AC, Cr.No.22/2019/AC/CB u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 was registered by me on 07.11.2019 at 17.15 hrs. Sd/- (x/x/x) 07.11.2019 DSP/V&AC/Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் வாதியின்

புகார் மனு மற்றும் Sandisk என்ற பெயர் பதிக்கப்பட்ட 16 GB Pendrive ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்கள் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்படுகிறது.